நெல் கொள்முதல்

*255 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நடப்பு ஆண்டில் (1967-68) சர்க்கார் கொள்முதல் செய்ய உத்தேசித்திருக்கும் நெல்லின் அளவு என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: 1967-ம் ஆண்டில் சம்பாப் பயிரிலிருந்தும் இடைக்காலப் பயிரிலிருந்தும் 5.5 லட்சம் டன் அரிசியும் குறுவைப் பயிரிலிருந்து 2.5 லட்சம் டன் அரிசியும் கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இக் கொள்முதல் இலக்குகள் ஓர் ஆண்டிற்கென வரையறுக்கப்படுகின்றன. இவை இம்மாநிலத்தில் தற்போதைய பயிர் விளைச்சல் முறையின் அடிப்படையில் அமைந்துள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொள்முதலைப்பற்றி நான்கு வினாக்கள் இருக்கின்றன. நான்குக்கும் விடையளிக்கப்பட்ட பின்னர், துணை வினாக்களைக் கேட்கலாமா என்பதைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தம் இசைவைத் தெரிவித்தால் நல்லதாக இருக்கும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சரி, நான் ஒப்புக்கொள்கிறேன்.

*256 Q.—THIRU K. VINAYAKAM. Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is the policy of the Government to exempt small land owners from the operation of compulsory procurement of paddy; and

(b) if so, what is the limit of land one should possess for exemption?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) ஒரு ஏக்கர் பரப்பும் அதற்குக் குறைந்த அளவும் உள்ள நிலங்களுக்குக் கொள்முதல் திட்டத்திலிருந்து விலக்களிக்குமாறு மாவட்டக் கலெக்டர்கள் அனைவருக்கும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

*257 வினா—திரு. நா. வீராசாமி: மதிப்பிற்குரிய உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தனிப்பட்ட ஏஜெண்டுகள் நெல் கொள்முதல் செய்வதைவிட, அரசாங்க அதிகாரிகளே நெல் கொள்முதல் செய்வதற்கான உத்திரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: சூழ்நிலைகள் காரணமாகவோ, சிறப்பான காரணங்களுக்காகவோ திருநெல்வேலி மாவட்டத்தில் கலெக்டர் செயல் படுத்தியதுபோல அரசாங்கச் சார்பில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கொள்முதல் செய்தாலும், தனியார் மூலம் கொள்முதல் செய்யும் ஏற்பாடு பொதுவாகப்

1967 ஜூலை 11]

பின்பற்றப்படுகிறது. இந்த ஏற்பாட்டிற்குப் பதிலாக, அரசாங்க அதிகாரிகள் கொள்முதல் செய்யும் முறையையே செயல் படுத்தும் செயற்குறிப்பு அரசாங்கத்திற்கு இல்லை.

*258 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உணவு கார்ப்பரேஷன், கூட்டுறவு சங்கங்கள் ஆகியவைகளின் உணவுப் பொருள் கொள்முதல் விலைகளிலும், விற்பனை விலைகளிலும் முறையே வித்தியாசமுண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, இப்போது இருக்கும்படியான கொள்முதல் திட்டத்திலே எந்தவகையிலே கொள்முதல் செய்வது என்ற தீர்மானமான முடிவு சர்க்காருக்கு இருக்கிறது?

Is it intensive procurement or levy system of procurement?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். கடந்த சம்பா பருவத்தில் ஒரு ஏக்கரும், ஒரு ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கும் உடைமையாளர் களுக்கும் கொள்முதலிலிருந்து விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். ஒரு ஏக்கரிலிருந்து 10 ஏக்கர் வரை வைத்திருப்பவர்களுக்கு இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று வரையறை செய்திருக்கிறோம். பத்து ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களுக்கு, மார்க்கெட் டபிள் சர்பிளஸ் என்ற அளவில் கொள்முதல் செய்கிறோம். பல் வேறு மாவட்டங்களில் இது முழுமையாக அனுசரிக்கப்படவில்லை. இந்த முறையை வருகிற குறுவை அறுவடையின்போது அனுசரிக்கப்படும் முறைகளைக் குறித்து, கலெக்டர்கள் மகா நாட்டில் விவாதித்து இறுதியான முடிவு எடுக்கப்படும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, ஒரு ஏக்கரும், ஒரு ஏக்கருக்குக் குறைவாகவும் பூமி நிலம் வைத்திருப் பவர்களைக் கொள்முதலிலிருந்து விலக்கு அளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கும் உபரி நெல்லை தங்கள் இஷ்டம்போல் விற்றுக்கொள்ளலாம். பாக்கியிருக்கும் ஒரு ஏக்கராவுக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களும் தங்களுடைய உபரி நெல்லை தங்கள் இஷ்டம்போல் விற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய விதிமுறை களுக்கும், நாம் நிர்ணயிக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டு வெளிச் சந்தையிலே விற்க அவர்களுக்கு உரிமை உண்டு.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் கேட்கும்படியான கேள்வி வேறு. ஒரு ஏக்கரும், ஒரு ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்தி ருப்பவர்களுக்கும் வெளிச்சந்தையிலே தங்கள் உபரி நெல்லை